**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2014–15 ஆம் நிதியாண்டு – மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை 21 மாவட்டங்களில் துவக்குதல் மற்றும் ரூ.73,83,600/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல்– ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண். 83

நாள்: 10–12–2014
ஜய, கார்த்திகை 24,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.204, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 30.06.2005.
2. அரசாணை (நிலை) எண்.23, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 04.06.2010.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.1112/ மஇக.4/2014, நாள் 14.8.2014.

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் அரசு நிதியுதவியுடன் உதவும் உள்ளங்கள் என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லம் துவங்க ஆணையிடப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழகத்தில் மூன்று மாவட்டங்களுக்கு ஒரு மறுவாழ்வு இல்லம் என்ற அடிப்படையில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 10 மறுவாழ்வு இல்லங்கள் தொடங்கிட அனுமதியும், இதற்கென ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு அளித்தும் ஆணையிடப்பட்டது. அதன்படி திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் மதுரை ஆகிய 10 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.07.2014 அன்று ஏனையவற்றுடன் பின்வரும் ஒன்றினை அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

"மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் தற்போது அரசின் நிதியுதவியுடன், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம்,

வேலூர் மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறைவிடம், உணவு, மருத்துவம் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் 9 லட்சத்து 14 ஆயிரத்து 800 ரூபாய் வீதம், மொத்தம் 1.00 கோடியே 62 ஆயிரத்து 800 ரூபாயினை 11 இல்லங்களுக்கும் ஆண்டுதோறும் அரசு மானியமாக வழங்கி வருகிறது. தற்போது மன நல காப்பகம் இல்லாத மாவட்டங்களிலிருந்து மீட்கப்படும், மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், வேறு மாவட்டத்தில் இயங்கும் மன நல காப்பகம் அல்லது மன நல மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார்கள். எனவே, இதனை தவிர்த்து அந்தந்த மாவட்டங்களிலிருந்து மீட்கப்படும் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், அம்மாவட்டங்களிலேயே பயனடையும் வண்ணம் மீதமுள்ள 21 மாவட்டங்களில் மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு1 கோடியே 92 லட்சத்து 10 ஆயிரத்து 800 ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்''.

4. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், தற்போது, திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள், அரசின் நிதி உதவியுடன், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்பட்டு வருகின்றன என்றும், ஒரு இல்லத்திற்கு தலா ரூ.9,14,800/– வீதம் மொத்தம் ரூ.1,06,62,800/– அரசு மானியமாக வழங்கி வருகிறது என்றும், அந்தந்த மாவட்டங்களில் மீட்கப்படும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அம்மாவட்டங்களிலேயே பயனடையும் வண்ணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி எண்:110–ன் கீழ் அறிவிப்பின் அடிப்படையில், 2014–15 ஆம் நிதியாண்டில், மீதம் உள்ள 21 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்கள் அரசின் நிதி உதவியுடன் செயல்பட அனுமதியும், ஒரு இல்லத்திற்கு 6 மாதங்களுக்கான செலவினம் ரூ.4,92,400/– வீதம் 21 இல்லங்களுக்கு ரூ.1,03,40,400/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, தற்போது, திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை தவிர்த்து, மீதமுள்ள 21 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை 01.12.2014 முதல் புதியதாக துவக்கிட அனுமதியும் மற்றும் ஒரு இல்லத்திற்கு 4 மாதங்களுக்கான செலவினமாக ரூ.3,51,600/– வீதம், 21 இல்லங்களுக்கு ரூ.73,83,600/–ஐ (ரூபாய் எழுபத்து மூன்று இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இச்செலவினத்தினை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி–5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் – II மாநிலத் திட்டம்–MO– மனநோயால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான நிதியுதவி – 09. உதவித் தொகை –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".
(த.தொ.கு 2235–02–101–MO–0936)

7. மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 21 இல்லங்களை செயல்படுத்த மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் தகுதி வாய்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தேர்ந்தெடுக்கவும் மற்றும் நீக்கவும் அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே பத்தி–5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புது துணைப் பணித் திட்டம்” குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு– செலவு, பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித்(வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2014–15 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(சந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.எண்.66919/நிதி(சந)/2014, நாள்10.12.2014–ன்படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1698(ஆயிரத்து அறுநூற்று தொண்ணூற்று எட்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

**நகல்:–**

நிதி (சந/வ.செ.பொது–I,வ.செ.பொது–II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திற. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

அரசாணை(நிலை) எண்.83, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 10–12–2014.

மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை 21 மாவட்டங்களில் துவக்குதல் (4 மாதங்களுக்கான செலவினம்)

| வ.எண். | செலவின விவரம் | செலவுத் தொகை |
|---|---|---|
| 1. | சமூகப் பணியாளர்<br>(ரூ.8000/– x 4 மாதங்கள்) | ரூ.32,000/– |
| 2. | துணை மருத்துவ செவிலியர்<br>ரூ.5500/– x 4 மாதங்கள்) | ரூ.22,000/– |
| 3. | விடுதிக் காப்பாளர்<br>(ரூ.4000/– x 4 மாதங்கள்) | ரூ.16,000/– |
| 4. | சமையலர்<br>(ரூ.3000/– x 4மாதங்கள்) | ரூ.12,000/– |
| 5. | தொழிற் பயிற்சியாளர்<br>(ரூ.4000/– x 4 மாதங்கள்) | ரூ.16,000/– |
| 6. | உணவூட்டுச் செலவினம்<br>(ரூ.400/– x 50 நபர்கள் x 4 மாதங்கள்) | ரூ.80,000/– |
| 7. | 2 இணை உடைகள்<br>(ரூ.500/– x 2 x50 ) | ரூ.50,000/– |
| 8. | மருந்துகள்<br>(ரூ.250/– x 50 நபர்கள் x 4 மாதங்கள்) | ரூ.50,000/– |
| 9. | பாய்<br>(ரூ.150/– x 50 நபர்கள்) | ரூ.7,500/– |
| 10. | தலையணை<br>(ரூ.50/– x 50 நபர்கள்) | ரூ.2,500/. |
| 11. | சோப்பு, எண்ணெய் மற்றும் இதர செலவினம்<br>(ரூ.50/– x 50 நபர்கள் x 4 மாதங்கள்) | ரூ.10,000/– |
| 12. | சமையல் எரிவாயு<br>(ரூ.900/– x 4 மாதங்கள்) | ரூ.3,600/– |
| 13. | படுக்கை விரிப்பு<br>(ரூ.200/– x 50 நபர்கள்) | ரூ.10,000/– |
| 14. | வாடகை மற்றும் மின்சாரம்<br>(ரூ.10,000/– x 4 மாதங்கள்) | ரூ40,000/– |
| | மொத்தம் | ரூ.3,51,600/– |

| | |
|---|---|
| ஒரு இல்லத்தினை துவக்குவதற்கு ஆகும் செலவினம் | ரூ.3,51,600/– |
| 21 இல்லங்களை துவக்குவதற்கு ஆகும் செலவினம்<br>(ரூ.3,51,600/– x21 இல்லங்கள்) | ரூ.73,83,600/– |

(ரூபாய் எழுபத்து மூன்று இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.